**செய்தி வெளியீடு எண். 142 நாள் : 12-02-2010**

# செய்தி குறிப்பு

## 36 ஆம் இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி -2010

36 –வது **இந்திய சுற்றுலா மற்றும் தொழிற் பொருட்காட்சி 2010 டிசம்பர் மாதம் 22 ஆம் நாள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் துவங்கி வைக்கப்பட்டது.** இந்த ஆண்டு பொருட்காட்சியில் **42 அரசு அரங்குகள்** அமைக்கப்பட்டுள்ளன. அதன் விபரம் கீழ்வருமாறு

**26 மாநில அரசுத் துறைகள்**
**12 அரசுத்துறை நிறுவனங்கள்**
**3 மத்திய அரசுத் துறை நிறுவனங்கள்**
**1 பிறமாநில அரசுத்துறை**

மத்திய – மாநில அரசுகளின் ஆக்கபூர்வ பணிகளையும், மக்கள் நலனுக்காக அரசு தீட்டியுள்ள திட்டங்களையும் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் இவ்வரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அண்ணா கலையரங்கில் தினமும் பல்வேறு சிறப்பு கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மற்றும் 40 வகையான கேளிக்கை விளையாட்டு சாதனங்கள் பொதுமக்களை மகிழ்விக்க அமைக்கப்பட்டுள்ளது.

**இதுவரை (**11-02-2010) **சுமார் 9,87,212 பொதுமக்கள் வருகை புரிந்துள்ளனர். இதன் மூலம் ரூ.1,61,82,006/-** தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் வருவாய் ஈட்டியுள்ளது. இது கடந்த ஆண்டை விட சுமார் ரூ.30 இலட்சம் அதிகம். 2010–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ம் நாள் (ஞாயிறு) மாலை 6.00மணியளவில் தீவுத்திடலில் நிறைவு விழா நடைபெறும். **மாண்புமிகு நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் 36–வது இந்திய சுற்றுலா பொருட்காட்சி -2010** நிறைவு செய்து விழா பேருரையாற்றுகிறார்கள். மாண்புமிகு சுற்றுலா மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு என். சுரேஷ்ராஜன் அவர்கள் தலைமை வகிக்கிறார்கள்.

*****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–600 009.**